ௐ

# நல்லைக்கலாமந்திர்

18வது ஆண்டின் காலடியில்

NALLAI KALA MANTHIR
Dancing Academy



# சதங்கை நாதம்

## (நடன ஆற்றுகை)

**19.06.2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராகம் : ஹம்சத்வனி
தாளம் : ஆதி
இயற்றியவர் : வசாவிளான் தவமைந்தன்

பல்லவி
கணபதியே மகா கணபதியே
நினதடியே சரண் நம்பி வந்தேன்

அனுபல்லவி
தினமுனையே நினைந்து தேனினிய தமிழில்
மனமுருகிப் பாடி மண்டியிட்டேன்

சரணம்
வல்லவனே வந்து வழிகாட்டுவாய்- வரும்
அல்லல் களைந்து அருள்கூட்டுவாய் - எழில்
நல்லைக் கலாமந்திர் நடனாலயம் உயர
தில்லையில் ஆடும் கூத்தன் மைந்தனே வந்தருள் தந்தருள்





## கலாவித்தகர் பட்டம் பெற்ற நல்லைக்கலாமந்திர் மாணவர்கள்



கஜனி இராஜரட்ணம்
2013



காயத்திரி சந்திரபாலன்
2014



மிதர்சினி பாண்டியராஜா
2015



தர்ஷிகா றமணிதாஸ்
2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | மங்கள விளக்கேற்றல் | | | | |
| 2. | இறைவணக்கம் | | | | |
| 3. | ஆசியுரைகள் | | | | |
| 4. | புஸ்பாஞ்சலி | இராகம் | : கம்பீரநாட்டை | தாளம் | : ஆதி |
| | | சாகித்திய கர்த்தா | : திரு.தவநாதன் றொபேட் | | |
| 5. | பிள்ளையார் கீர்த்தனை | | | | |
| | | இராகம் | : பகுதாரி | தாளம் | : ஆதி |
| | | சாகித்திய கர்த்தா | : திரு.தவநாதன் றொபேட் | | |
| 6. | மகிழ்ந்தாடல் | இராகம் | : குந்தலவராளி | தாளம் | : ஆதி |
| 7. | பாரதியார் பாடல் | இராகம் | : இராகமாளிகை | தாளம் | : ஆதி |
| 8. | வர்ணம் | இராகம் | : கல்யாணி | தாளம் | : ஆதி |
| | | சாகித்திய கர்த்தா | : திரு.தவநாதன் றொபேட் | | |
| 9. | சிறப்புவிருந்தினர் உரை | | | | |
| 10 | பகலவனே போற்றி (தெம்மாங்கு) | | | | |
| 11. | பதம் | இராகம் | : ஹம்ஸநாதம் | தாளம் | : ஆதி |
| | | சாகித்திய கர்த்தா | : திரு.தவநாதன் றொபேட் | | |
| 12. | அம்மன் கீர்த்தனை | இராகம் | : ஹம்ஸானந்தி | தாளம் | : ஆதி |
| | | சாகித்திய கர்த்தா | : பிரம்ஸ்ரீ N.வீரமணி ஐயர் | | |
| 13 | சிறப்பு விருந்தினர் உரை | | | | |
| 14 | மனம் கவர் மாதவன் | இராகம் | : இராகமாளிகை | தாளம் | : ஆதி |
| | | சாகித்திய கர்த்தா | : திரு.சந்திரசேகர் சந்திரலிங்கம் | | |
| 15 | பிரதம விருந்தினர் உரை | | | | |
| 16. | காவடிச்சிந்து | இராகம் | : செஞ்சுருட்டி | தாளம் | : ஆதி |
| 17. | நன்றியுரை | | | | |
| 18. | தில்லானா | இராகம் | : நளினகாந்தி | தாளம் | : ஆதி |
| | | சாகித்திய கர்த்தா | : திரு.தவநாதன் றொபேட் | | |
| 19. | மங்களம் | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதங்கைநாதம் 2013



## ஓர் மீள் பார்வை.................

நல்லைக்கலாமந்திர் தனது 15 வருடத்தில் கால் பதிக்கையில் "சதங்கைநாதம் 2013" என்ற தொகுப்பில் ஒரு நடன ஆற்றுகையினை 2013ம் ஆண்டு ஆனி மாதம் 16ம்திகதி சனிக்கிழமை நல்லை ஸ்ரீ துர்க்கா தேவி மணி மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றது. பெருந்திரளான நடனக் கலாரசிகர்கள் திரண்டு வந்து நிகழ்வை களிப்புடன் கண்டுமகிழ்ந்தனர்.



அன்றைய நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முன்னைநாள் மாவட்ட நீதிபதி அமரர். மு.திருநாவுக்கரசர் (விகடகவி) அவர்கள் பங்குபற்றி சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக நல்லைக் கலாமந்திரின் போசகரும் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவருமாகிய கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள். கௌரவ விருந்தினராக நல்லைக் கலாமந்திர் நிறுவன ஸ்தாபகரும் நிறைவேற்றுப் பணிபாளருமாகிய திருமதி அனுஷாந்தி சுகிர்தராஜ் அவர்களின் மானசீகக் குரு ஆகிய கலா பூஷணம் திருமதி பத்மினி செல்வேந்திர குமார் (இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர்) அவர்களும் கலந்து சிறப்பித்தார்.



நிகழ்வின் ஆரம்பத்தில் ஆசியுரைகளை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சரிய சுவாமிகள் அவர்களும் வண.பிதா.லியோ... ஆம்ஸ்ரோங் (பங்குத்தந்தை புனித.அந்தோணியார் ஆலயம்) பாசையூர் அவர்களும் வழங்கினார். ஸ்ரீமதி அனுஷாந்தி சுகிர்தராஜ் அவர்கள் தனது குருவான கலாபூசணம் திருமதி.பத்மினி செல்வேந்திரகுமார்அவர்களின் பாதம் பணிந்து குருவணக்கம் செய்ததை தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின. இந் நிகழ்வினை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை உப முதல்வரான செந்தமிழ்சொல்லருவி திரு.ச.லலீசன் அவர்கள் தலைமயேற்று சிறப்புடன் நடாத்தி முடித்தார். திறமையாக 16 நடன நிகழ்வுகள் அரங்கேறி சபையோரை மகிழ்வித்தது.



இந்த ஆடல் நிகழ்விற்கு வலுச்சேர்த்த கலைஞர்களாக நட்டுவாங்கம் : ஸ்ரீமதி அனுஷாந்தி சுகிர்தராஜ், பாட்டு : திரு.தவநாதன் றொபேட் மற்றும் ஸ்ரீமதி சுகன்யா அரவிந்தன், மிருதங்கம் : திரு.சி.துரைராசா, வயலின் : திரு.அ.ஜெயராமன், தபேலா :திரு.வெங்கடேச ஐயர் இரட்ண பிரபாகர சர்மா ஆகியோர் சிறப்புற வழங்கினார்.



இந்நிகழ்விற்கான ஒலியமைப்பினை திரு.சத்தியன் முரளி, சப்பதமி கலைக்கூடம் அவர்களும்,ஒளியமைப்பானை கோப்பாய் மனோலைற் அவர்களும் திறம்பட ஆற்றியிருந்தனர். மேடைக்கான பன் ஒளிர்விதான தொழிநுட்பத்தினை திரு.தர்மா அவர்களும் திருமதி.நவதர்சினி அவர்களும் மிகத்துல்லியமாக செயற்படுத்தியிருந்தனர்.



நிகழ்வின் சிறப்பினை பத்திரிகை ஊடங்களும், குறிப்பாக வீரகேரி வாரமலரினில் வர்ணபடங்களுடன் கூடியதான விமர்சனங்களை பிரசுரிக்கப்பட்டிருந்தது. டான் தொலைக் காட்சியினர் சிறந்த விமர்சனங்களையும் நிகழ்வினை முழுமையாக மீள்ஒளி பரப்பு செய்திருந்தனர்.

மாணவர்கள் மிகவும் சிறந்த வெளிக்காட்டலை வெளிப்படுத்தியதோடு மாணவர்களின் பெற்றோர்கள் மிகவும் உற்சாகத்தோடு சகல விடயங்களிலும் பங்கெடுத்து நிகழ்வின் வெற்றிக்கு பங்காற்றி இருந்தனர்.



இந்நிகழ்வினைச் சான்று பகரும் வகையில் "நல்லைக்கலா மந்திர்" 15ம்ஆண்டின் காலடியில் என்ற ஒரு அழகிய பல்வர்ண சஞ்சிகை ஒன்றும் வெளியிடப்பட்டது. இதனை நல்லூர் "மதிகலர்ஸ் பிறிண்டர்ஸ்" அழகிய முறையில் அச்சிட்டு வழங்கினார்கள். நிகழ்வானது மண்டபம் நிறைந்த கலை ஆர்வலர்களுடன் கலாவித்தகர் Dr.(திருமதி) கே.பிரேமிலா அவர்களின் நன்றியுரையுடன் மாலை 7.30 மணியளவில் இனிதே நிறைவுற்றது.












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



சின்மயா மிஷன்
இல 9 செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.

இயல், இசை நடனம், ஆகிய கலைகள், மனிதர்களை இறைவனை உணரவைக்க இறை நிலையை அடையவைக்கக்கூடியன. அந்த வகையில் கந்தப்பெருமான் அருள் நிறைந்துள்ள நல்லூரில் நடனக் கலையை பயிற்றுவித்துக் கொண்டிருக்கும் "நல்லைக் கலாமந்திர்" 17 ஆண்டுகளாகப் இப்புனிதப்பணியை ஆற்றி 18 ஆவது ஆண்டில் காலடி வைப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

கடந்த 17 ஆண்டுகளாக பாரதத்தில் உருவாகிய பரதக்கலையை பயின்று எம் குழந்தைகளுக்குப் புகட்டி பல அவைக்காற்றுகைகளை நடாத்தியதுடன், பல கலாவித்தகர்களையும் உருவாக்கியுள்ளமை மிகவும் போற்றுவதற்குரிய விடயமாகும். இன்றைய காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய விதத்தில் இளம் சமூகத்தை கலாசார வழிப்படுத்துவதில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து வரும் திருமதி அனுஷாந்தி சுகிர்தராஜ் அவர்களை பாராட்டுகின்றோம்.

மேலும் அவர்களின் பணி தொடர்ந்து பல நடனக்கலைஞர்கள் உருவாக்கப்பட்டு நாட்டியக்கலை நாடெங்கும் பரவ ஆசி வேண்டி எல்லாம் வல்ல பரம்பொருளையும், பூஜ்ய குருதேவரையும் பிரார்த்திக்கின்றோம்.

**"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"**

**இறைபணியில்**
**பிரம்ச்சாரி ஜாக்ரத சைதன்யா**
வதிவிட ஆச்சாரியர், சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்.

# நல்லைக்கலாமந்திர் போசகரின் ஆசிச்செய்தி




பிரபஞ்ச தத்துவத்தை விளக்கும் உன்னத கலைவடிவம் பரதக்கலை. இக்கலையை கடந்த 17 வருடங்காளக பல மாணவர்களுக்கு சிறப்பாக கற்றுக்கொடுத்துப் புகழ்பெற்றவர் ஸ்ரீமதி அனுஷாந்தி சுகிர்தராஜ் அவர்கள் நல்லூரில் "நல்லைக்கலாமந்தீர்" என்ற கலைக்கல்லூரியை அமைத்து இளையவர்களை ஆற்றுப்படுத்தி வரும் நடன வித்தகர் ஸ்ரீமதி அனுஷாந்தி பாராட்டுக்குரியவர்.

ஆண்டு தோறும் இவர்கள் எங்கள் நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணி மண்பத்தில் மாணவர்களின் ஆற்றுகை நிகழ்ச்சியை சிறப்பாக நடாத்தி பலரது பாராட்டைப் பெற்று வருகிறார்கள். அவ்வகையில் இவ்வாண்டு நடைபெறும் நடன ஆற்றுகை நிகழ்ச்சி சிறக்க எல்லாம் வல்ல துர்க்கா தேவியை பிரார்த்தித்து நல்லாசியையும், வாழ்த்தையும் தெரிவித்து அமைகிறேன்.

**"செஞ்சொற்செல்வர்"**
**கலாநிதி. ஆறு. திருமுருகன்**
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.
தலைவர், சிவபூமி அறக்கட்டளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாசிச்செய்தி
## தமிழ் கலைப்பயணம் வாழ்க



ஒரு இனத்தின் இருப்பும், இயல்பும் அதன் பாரம்பரிய கலாச்சார விடயங்களில் தங்கியிருக்கின்றது. அல்லது அவற்றின் ஊடாக வெளிப்படுகின்றது. மனித வளர்ச்சியின் பின்னனியில் நோக்குகையில் அந்தந்த இனத்தின் இயங்கு நிலைகள் அதன் விழுமியங்கள் ஊடே காட்சித்தருகின்றது.

பூகோளமயமாதல், நவீன காலனித்துவ பிள்ளைகளின் ஆதிக்கம் இன்று இனத்துவ அடையாளங்களை மழுங்கடிக்கச் செய்வது கண்கூடு. தமிழ் இனத்தின் போராட்ட அரசியல் பின்னணிகள் எமது இனத்துவ அடையாளத்தை பெரிதும் பேணவும் கட்டியெழுப்பவும் துணைபுரிந்தன. ஆயுத போர் வெற்றியின்அல்லது தோல்வியின் ஆதிக்க நிலை எமது அடையாளங்களை அழிக்கச் செய்வது வேதனை தருகின்றது. மேலைத்தேய மோகமும், நாட்டமும் எமது கலை, கலாச்சார பண்பாட்டு விழுமியங்களை வேரறுக்கச் செய்கின்ற கால கட்டத்தில் மேடை நிகழ்வுகளோடு மட்டும் எமது இனத்துவ அடையாளம் பேணப்படுவதாகக் தோன்றுகின்றது.

வேரோட்டமான மாற்றுச் செயற்பாடுகளை உயிரோட்டமாக தோற்றுவிக்க வேண்டிய கடப்பாடு இன்று எமக்கு அவசியமே. அதன் அடித்தள பணியாகவே இவ் நல்லைக் கலாமந்திர் தன் பணியை சிறப்பாக ஆற்றி வருகின்றது. மூன்று வருடங்களின் முன் இவ்வமைப்பில் நடன நிகழ்வில் பற்றிய நினைவைத் தந்தது. வரவேற்பில் இருந்த மயில்வடிவ கோலங்களில் இருந்து ஒவ்வொரு நிகழ்வும் நிறைவான மகிழ்வைத் தந்தது. நடனங்கள் வழி தமிழ் செய்யும் நற்பணிக்கு வாழ்த்துகிறேன்.

மேடைப்பேச்சுக்கள் பேசி சில்லறை அரசியல் செய்யும் பலரை அறிகின்றோம்.இலை மறை காய்களாக நின்று வேரோட்டமாக புத்துணர்ச்சியும், புதுப்பொலிவும் ஊட்டும் அற்புத மனிதர்கள் தமிழர்கள் சிலராவது குடாநாட்டை அலங்கரிப்பது மகிழ்வு தருகின்றது. அந்த வகையில் திருமதி சுகிர்தராஜ் அனுஷாந்தி அவர்களின் தமிழ்ப்பயணத்தை வாழ்த்தி நிற்கின்றேன். பதினெட்டு ஆண்டுகால கலைப்பயணம் ஒரு கல்லூரியாக வளர வாழ்த்துகின்றேன். இறையாசீர் பகிர்ந்து நிற்கின்றேன்.

தோழமையில்
**அருட்பணி சி.லீயோ ஆம்ஸ்ரோங்**
*தூய அந்தோனியார் ஆலயம், பாசையூர்.*

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



பரதம் என்பது ஒரு தெய்வீகக் கலை. தமிழ் சமுகத்தின் நாகரீகமும் பண்பாடும் மிகவும் தொன்மையானது. இயற்கையுடன் இணைந்த தமிழ் கலாச்சாரத்தினை உணர்த்தும் கலையாகவும், பண்பாட்டின் அடையாளமாகவும் விளங்குவது பரதக் கலையாகும்.

வரலாற்றுப் பெருமைமிக்க யாழ்ப்பாண மாவட்டத்தின் தனித்துவமான கலை, கலாச்சாரம், பண்பாட்டுப் பெருமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுடன் அடுத்த சந்ததிக்கு அவை முறையாக எடுத்துச் செல்ல வேண்டும். அதன் ஒர் அங்கமாக இவ் புனித கலையினை நல்லைக் கலாமந்திர் நடனாலயத்தில் முறையாக பயின்று தமது ஆற்றுகையினை வெளிப்படுத்தவுள்ள மாணவர்களின் நிகழ்வானது மிகச் சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றேன்.

இவ்வாறான பல நடன, கலை நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதன் மூலம் எமது கலைகள் பேணப்படும் என்பதில் ஐயமில்லை.ஆதலால், மாணவர்களின் நடன ஆற்றுகைக்கு பக்கபலமாகவிருக்கும் ஆசிரியர் திருமதி அனுஷாந்தி சுகிர்தராஜ் அவர்களுக்கும், மாணவர்களின் பெற்றோர்களின் முயற்சிகளுக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**நன்றி**

**நா. வேதநாயகன்**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்**
*யாழ். மாவட்டம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதம விருந்தினரின் வாழ்த்துச் செய்தி

### "நல்லைக் கலா மந்திர் ஆழ வேரூன்றி அகல கிளைபரப்பி வாழ வாழ்த்துக்கள்"



மனிதனின் ஆழ் மன உணர்வுகளின் வெளிப்பாடே கலைகள் ஆகும். இக் கலைகள் ஆடலாக, பாடலாக, இசையாக, கட்டடமாக, சிற்பங்களாக, ஓவியங்களாக பல்பரிமாண தோற்றத்தின் உள்வாங்குகையைக் கொண்டதாகும். உலகில் மனித இனம் தோன்றிய போதே கலை பண்பாடுகளும் அந்த இனங்களின் அடையாளங்களாக வெளிப்படுத்தப்பட்டன.

தமிழர்களின் வரலாற்றிலும் இனம் தோன்றி வளர்ந்த போதே ஆடல் வல்லானாக நடராஜர் வடிவம் போற்றப்படுகிறது. இறைவனையே ஆடல் வடிவமாகப் பார்த்தவர்கள் சைவத் தமிழர்கள். அதனால் தான் ஆடற்கலையின் சொந்தக்காரர்கள் என்று சொல்லுகின்ற உரிமை தமிழர்களுக்கு அசைக்க முடியாமல் உள்ளது. இன்று பெருக்கும் புகழுக்கும் வியாபாரப் பொருளாக கலைகள் மாற்றப்படும் போது எம் தமிழர் கலையை வளர்க்க என்றும் துடிப்புடன் செயற்படும் நல்லைக் கலாமந்திர் கலைக் கல்லூரியையும் அதன் சிற்பி திருமதி. அனுசாந்தி சுகிர்தராஜ் அவர்களையும் மனதாரப் பாராட்டுகின்றேன். உங்கள் பணி தொடர என் இதய பூர்வமான வாழ்த்துக்கள்.

**சி.சிறீதரன்**
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.

## நிகழ்வின் தலைவரின் உள்ளத்தில் இருந்து...



ஒரு காலத்தில் குருகுலக் கல்வியாகப் பயிலப்பட்டு வந்த பரதநாட்டியக் கல்வி இன்று முறைசார் கல்வியாக உருப்பெற்று பல்கலைக்கழகச் சிறப்புக் கற்கையாகவும் மிளிர்கின்றது. பாடசாலைகள், ஆசிரிய கலாசாலைகள், கல்வியியற் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் எனப் பலதளங்களில் இம்முறைசார் கற்கைகள் வழங்கப்பட்டாலும் இன்றும் குரு சீடப் பாரம்பரியத்தின் செல்வாக்கே இத்துறையில் மேலோங்கி நிற்கின்றது.

செயல்முறைசார் தேடலை மரபுவழியான குரு சீட பாரம்பரியத்தின் ஊடாகவே பெரும்பாலான மாணவர்கள் பெற்றுக்கொள்கின்றனர். இந்தவழியில் வடபுலத்தின் தனித்துவமான நாட்டியத்திலகமாக விளங்கும் கலாபூஷணம் பத்மினி செல்வேந்திரகுமாரின் கலைவாரிசுகளில் ஒருவராகத் திகழும் நாட்டிய நங்கை திருமதி அனுஷாந்தி சுகிர்தராஜ் இன்று யாழ். மண்ணில் கவனிப்புக்குள்ளாகியுள்ள நாட்டிய ஆசிரியர்களுள் ஒருவராக விளங்குகின்றார். இவரது நல்லைக் கலாமந்திர் மாணவர்கள் வெளிப்படுத்தும் ஆற்றுகைத் திறன் இவரது தனித்துவ ஆளுமைக்கான அடையாளங்களுள் ஒன்றாகக் கொள்ளத்தக்கது.

எனது இனிய நண்பர் திரு. ந. சுகிர்தராஜின் ஆதரவுடனும் மாணவச் செல்வங்களின் பெற்றோர் மற்றும் புகழ்பூத்த துறைசார் கலைஞர்களின் பங்களிப்புடனும் நல்லைக் கலாமந்திர் காணும் விழா எம் கண்களுக்கும் சிந்தைக்கும் விருந்தளிக்கும் இனிய விழாவாக அமையும் என்றே எதிர்பார்க்கின்றேன்.நல்லை மண் வரலாற்றுச் சிறப்புமிக்க மண். புனிதத்திற்குப் பெயர் பெற்ற மண். நல்லை மண்ணில் வழங்கப்படும் பரதநாட்டியக் கல்வியும் புனிதம் மிக்கதாகவே விளங்கும் என்பதில் ஐயமில்லை. பதினெட்டு வருடங்களாக இந்நிறுவனத்தை கண்போற் காத்து அதன் பயனை இன்று சுகிக்கின்றோம்.

இவ்வாண்டும் எனது தலைமையில் இவ்விழா நடைபெறுவது, நான் பெற்றிருக்கக்கூடிய பாக்கியங்களுள் ஒன்றென்பேன். நிகழ்வில் பங்கேற்கும் மாணவச் செல்வங்கள் பரதக் கலைத்துறையில் பிரகாசிக்கவும் நிகழ்வு சிறப்புற அமையவும் நல்லைக் கந்தக்கடவுளின் திருவருளுக்காகப் பிரார்த்திக்கின்றேன். இனிய நல்வாழ்த்துக்கள்.

**"கனவு மெய்ப்பட வேண்டும் கைவசமாவது விரைவில் வேண்டும்"**



**"செந்தமிழ்ச்சொல்லருவி"**
**ச.லலீசன்**
பிரதி முதல்வர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.பொதுச் செயலாளர்,
யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச்செய்தி



நல்லைக்கலாமந்திர் நடன நிறுவனத்தின் ஆண்டு நிறைவு விழா கலைநிகழ்ச்சிக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

பரதத்தின் ஆதார அம்சங்களாகிய நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் என்பவற்றின் பயன்பாடுகள் பன்னெடுங்காலத்திற்கு முன்னரே உயர்ந்த நிலையைப பெற்றிருந்தன. காலத்தால் பண்பட்டு மெருகுற்று இன்றும் அகிலம் போற்றும் அற்புத அருங்கலையாகத்திகழ்கின்றது. சிற்பம், ஓவியம் எனும் கலைகள் கண்ணுக்கு மட்டும் இன்பம் அளிப்பதாகவும் இசை காதுக்கு மட்டும் இன்பம்அளிப்பதாகவும் நடனம் காது, கண், ஆகிய புலன்களுக்கு இன்பமளிக்கும் சிறப்புடையது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக நடனத்தால் அபிநயத்துக்காட்டப்படும் நுட்பமாக அக உணர்வுகள் ஜீவாத்மா, பராத்மா உறவை உணர்த்தி நிற்கும் உருவங்களாக காணப்படுவதே ஆகும்.

இவ் உயர்ந்த தத்துவத்தை மிக அழகாகவும், எளிமையாகவும் தர்ம சிந்தனையோடும் உணர்த்தும் பாங்கு ஆடலும், பாடலும் இணைந்த பரதக்கலைக்கு மட்டும் உரித்தாகும். அந்த வகையில் வீட்டிற்கு ஒரு பிள்ளையாவது ஏதாவது ஒரு கலையில் ஈடுபாடுடையவராக இருக்கிறார். அந்தக்கலையை சிறந்த முறையில் அவைக்காற்றுகை செய்து தமது திருப்தியை வெளிப்படுத்தி நிற்கின்றனர். மாணர்கள், பாடசாலைகளில் வேறு பாடத்துறையில் கற்கும் மாணவர்கள் கூட சந்தர்ப்பங்கள் குறைந்தவர்களும், இவ்வாறு தாம் பயிலும் பிரத்தியேக நிறுவனங்களினூடாக வாய்ப்பை பெற்று தங்களது சிறப்பான அளிக்கையைவெளிப்படுத்தி நிற்கின்றார்கள். அந்த வகையில் "நல்லைக்கலாமந்திர்" இயக்குனர் திருமதி அனுஷாந்தி சுகிர்தராஜ் சிறந்த கலைப்பணியை செய்து மாணவர்களை உருவாக்கி வருகிறார் இதற்கு அவரது கணவரும் உற்றதுணையாக சேவையாற்றி வருகிறார்கள்.

கலைப்பின்புலம் உள்ள இவர்களது பணி பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். நடைபெறப் போகும் இவரது மாணவர்களது நிகழ்ச்சிகள் சிறப்புற அமையவும், குருவிற்கும் பெற்றோருக்கும் நாட்டியத்துக்கும் நற் பெயரை பெற்றுக்கொடுக்கவும் எல்லாம் வல்ல இறையருள் கிடைக்க வேண்டி என் நல்வாழ்த்துக்களை கூறி நிற்கின்றேன்.

**"வாழ்க கலைப்பணி வளர்க நம் கலைப்பாரம்பரியம்"**

**"கலா கீர்த்தி" ஸ்ரீமதி சாந்தினி சிவநேசன்**
ஓய்வுநிலை விரிவுரையாளர்
கலா பவனம் கொக்குவில்.

## ஆசிச்செய்தி



நல்லைக்கலாமந்திர் அதிபர் திருமதி அனுஷாந்தி சுகிர்தாஜ் அவர்கள் நடாத்தும் 17 ஆண்டு நிறைவு விழாவுக்குஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

கலைகள் என்பன மனிதனுக்கு மகிழ்ச்சியைத்தர வல்லன. அறுபத்துநான்கு கலைகளில் மிக சிறப்பாக கருதப்படும் கலை நடனக்கலை. இப் பரதக்கலையினை ஆர்வத்துடன் கற்று அர்ப்பணிப்புடன் கற்றுவரும் ஒரு சிலரில் திருமதி சுகிர்தராஜ் அனுசாந்தி ஒருவராவார்.

கலை ஆர்வம், விடாமுயற்சி, உடனே கிரகித்து வெளிப்படுத்தும் திறன் குருபக்தி போன்ற நற்பண்புகளை தனக்கென்றே கொண்டவர். அனுஷாந்தி அத்துடன் ஆற்றுகைத் திறனும் மிக்கவர்.இன்று அனுஷாந்தி இத்துறையில் சிறந்த முறையில் பயணித்துக் கொண்டிருப்பதற்கு உறுதுணையாக இருப்பவர் அவரது கணவர் திரு சுகிர்தராஜ் அவர்களையே சாரும். ஆகவே இத்திறன்களைக்கொண்ட அனுஷாந்தியின் கட்டுக்கோப்பில் வளர்ந்து கொண்டிருக்கும் மாணவர்களின் திறன்களை வெளிப்படுத்தும் இப் 17வது ஆண்டு நிறைவு விழா சிறப்பாகஅமையும் என்பது திண்ணம். நல்லை கலாமந்திர் மேலும் ஆண்டு விழாக்களை தொடர்ந்து நடாத்த வேண்டுமென வாழ்த்தி மேலும் பல மாணவர்கள் செல்வங்கள் உருவாக வேண்டும் எனவும் வாழ்த்தி, நல்லைக்கந்தன் தாழ் பணிந்து ஆசி கூறுகின்றேன்.

**"கலாபூஷணம்" திருமதி பத்மினி செல்வேந்திரகுமார்**
ஓய்வு நிலை ஆசிரியஆலோசகர்
யாழ்கல்வி வலயம்.கலைக்கோவில் உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துக்களும் ஆசிகளும்



நல்லைக் கந்தன் ஆலயச் சூழலில் ஆடற்கலையைப் பயிற்றுவிக்கும் ஆலயமாக ஆசிரியர் ஸ்ரீமதி அனுஷாந்தி சுகிர்தராஜ் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது தான் நல்லைக் கலாமந்திர் நாட்டியப்பள்ளி. இதன் ஆண்டுவிழா சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். ஒரு தாய் தன் மகளின் மகத்துவமான பணியை மனம் நிறைந்து பாராட்டுவதற்கு ஒப்பானதே இதுவெனில் அது மிகையல்ல. ஏனெனில் கலாவித்தகர் முதுநுண்கலைமாணி ஸ்ரீமதி அனுஷாந்தி சுகிர்தராஜ் அவர்கள் யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் நடனத்துறையில் பயின்ற காலத்தில் என்னால் இனங்காணப்பட்ட சிறந்த நாட்டிய நட்சத்திரங்களில் ஒருவர். எனது மனங்கவர்ந்த நன் நாட்டிய மாணாக்கர்களில் சிறப்பானவர். பணிவு, அடக்கம், அழகு, ஆர்வம், தன்னம்பிக்கை, குருபக்தி, இறைபக்தி, ஆடல் நுணுக்கம், நட்டுவாங்கச் சிறப்பு என்றனைத்து நாட்டிய ஆசானுக்கான பண்புகளும் நிறைந்தவர். அதனால்தான் எனது நாட்டிய ஆக்கங்களுக்கு உயிர் கொடுக்க அனுஷாந்தியைப் பெரிதும் தேர்ந்தெடுத்தேன். எமது நாட்டிய கலா கேந்திரா தயாரித்தளித்த பல நாட்டிய நிகழ்வுகளுக்கு நட்டுவாங்கம் செய்யும் பணியை உவந்தளித்தேன்.

ஆசிரியர் அனுஷாந்தி அவர்கள் ஒப்பற்ற ஓவியக் கலைஞர்களான மறைந்த ஆர்ட்டிஸ்ட் மணியம் மற்றும் செல்வி யசிந்தா செல்வரெட்ணம் போன்ற மரபு வழி ஓவியக்கலைஞர்களையும் இசைப் பாரம்பரியத்தையும் கொண்ட கலைக் குடும்பத்தில் பிறந்தவர். இக் குடும்பம் அதன் கலைப் பாரம்பரியத் தொடர்ச்சியாக நல்லைக் கலாமந்திர் கலையகம் ஊடாக நாட்டியக் கலையிலும் தம் கலைப் பங்களிப்பை அனுஷாந்தி மூலம் பல மாணவர்களுக்கு போதிக்கின்றமை சிறப்பாகும்.

நல்லைக் கலாமந்திர் மாணவர்கள் தாம் பயின்ற பரதக்கலை சிறப்பினை வெளிப்படுத்தவும் கலையகம் தனது பதினெட்டாவது ஆண்டில் காலெடுத்து வைக்கும் நிகழ்வினை சிறப்பிக்கவும் 19.06.2016 அன்று தமது செயலாற்றுகைகளை மேடையேற்றுவது அறிந்து பெருமையடைகிறேன். மாணவர்களின் கலைப்பயில்வின் வெளிப்பாடு முகிழ்த்து முன்னோக்கிச் செல்ல முருகன் நல்லூர் குமரன் அருள் பாலிப்பானாக. ஆண்டுவிழா நிகழ்வுகள் ஆடல் ஆராதனையாக ஆடல்வல்லான் முன்னிலையில் ஆரம்பமாகி ஆண்டவனை அண்மிக்கும் ஆலய தரிசனமாக அமைய வேண்டி அனுஷாந்தியையும் அவர்தம் மாணாக்கர்களையும் வாழ்த்துகிறேன்.

*பரதநாட்டியம் என்பது - அழகியலாடலில் ஆழ்ந்து அநுபவித்து அம்பலவனை அண்மிக்கவைக்கும் அருங்கலை.இரசனையினால் ஈர்த்த இரசிகனை இறையினில் இன்புறவைக்கும் இசைந்தகலை.உலகியலினூடே ஊற்றெடுத்த உணர்வுகளை உன்னதநிலைக்குயர்த்தி உய்விக்கும் உயர்ந்தகலை.எம்மவரும் ஏனையோரும் ஏற்றிப்போற்றும் எழுச்சிபெற்ற எழிலார்ந்த்கலைஒலியும் ஓசையும் ஒயிலார்ந்த வாடலும் ஒருங்கிணைந்த ஒப்பற்ற நம்பரதக்கலை.*

**கலாநிதி. (Dr.)கிருஷாந்தி இரவீந்திரா**
**இயக்குனர் – நாட்டியகலாகேந்திரா.**

## மாவட்ட கலாச்சார உத்தியோகத்தரின் வாழ்த்துச் செய்தி



நல்லைக் கலாமந்திர் நடனாலயம் மாணவர்கள் வழங்கும் சதங்கைநாதம் 2016 நடன ஆற்றுகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். கலைவளமும், தமிழ்மணமும் ஒருங்கே அமையப் பெற்ற யாழ்ப்பாணத்தின் வடபால் நானிலச் சிறப்புக் கொண்டமைந்த நல்லூர் பிரதேசமானது பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்து நிற்கின்ற வரலாற்றுப் புகழ்மிக்க ஆலயங்களையும் பல்துறைக் கலைஞர்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்ற இடத்தில் நல்லைக் கலாமந்திர் நடனாலயம் அமைந்து இருப்பது பெருமைக்குரியது.

எனவே எமது கலை, கலாச்சாரங்களைப் போற்றிப் பாதுகாப்பது அனைவரதும் தலையாய கடமையாகும். ஆகவே நல்லைக் கலாமந்திர் நடனாலயம் மாணவர்கள் வழங்கும் சதங்கைநாதம் நடன ஆற்றுகையானது எமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியைத்தருகின்றது. அழிவடைந்து வரும் கலைப் பொக்கிசங்களை காட்சிப்படுத்துதல் மூலம் இக்காலச் சந்ததியினர் அறிந்துகொள்ள இத்தகைய நடன ஆற்றுகை துணைநிற்கின்றன. எனவே இவ் அரிய முயற்சியில் ஈடுபட்ட நல்லைக் கலாமந்திர் நடனாலயம் பொறுப்பாசிரியர், மாணவர்கள், பெற்றோர் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ. கிருஷ்ணகுமார்**
**கலாச்சார அலுவல்கள் திணைக்களம்,**
மாவட்டச் செயலகம்,யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டுகளை கடந்து நிலைக்க வாழ்த்துகின்றோம்



பெற்ற தாயும் பிறந்தபொன்னாடும்.நற்றவ வானிலும் நனி சிறந்தனவே. என்பதை மெய்ப்பிப்பார் போலத் திருமதி அனுஷாந்தி சுகிர்தராஜ், தான் பிறந்த இடத்தின் பெயரால் ஒரு நல்லைக் கலா மந்திர் என்ற நடனாலயத்தை உருவாக்கி அங்கே பல நாட்டிய கலைஞர்களையும் உருவாக்கி வருவதை நேரிலே கண்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைந்துள்ளேன்

முத்தமிழில் ஒன்றான ஆடற்தமிழை சுத்தமான முறையிலும் பக்தியோடும் சித்தியோடும் கற்பனை வளத்தோடும் பயிற்றிவருகின்ற நல்லைக் கலாமந்திர் பண்பாக பணியாற்றத் தொடங்கி 17 ஆண்டுகள் நிறைவுறும் இந்த வேளையில், அதன் இயக்குனராக செயலாற்றி வருகின்ற திருமதி அனுஷாந்தி சுகிர்தராஜ் அவர்களை மனமுவர்ந்து வாழ்த்தி பாராட்டுவதுடன், இவரின் முதல் குரு என்ற வகையில் எனக்கு அது ஒரு முக்கிய கடமையாகின்றது. பாரம்பரியம் மிக்க கலைப்பின் புலத்தை சேர்ந்தவர் என்பது அவர் ஆற்றும் சேவையில் இருந்தே காணக் கூடியதாக இருக்கின்றது. அவர் பல நாட்டிய கலைஞர்களை உருவாக்குவதோடு தானும் ஒரு ஆடற்கலைஞராக மிளிர்ந்து நாட்டிய தாரகையாக இருப்பது பாராட்டபடவேண்டியதொன்றாகும் இதற்கு உறுதுணையாக இருக்கும் திருவாளர் சுகிர்தராஜ் அவர்கள் பாராட்டப்படவேண்டியவர் ஆவார். இவ்வாறு திருமதி.அனுசாந்தி அவர்கள் உணர்வோடும் உதிரத்தோடும் கலந்து எம்மோடு வாழ்கின்ற கலையை நம் சந்ததியினருக்கு கற்றுக்கொடுக்கின்ற இந்த பணியை மனம் திறந்து பாராட்டுகின்றேன். 17வது ஆண்டு நிறைவை கொண்டாடுகின்ற நல்லை கலா மந்திர் மேலும் மேலும் வளர்ந்து பல சேவை ஆற்ற உள்ளதால் வாழ்த்துகின்றேன். வாழ்க நடனக்கலை வாழ்க வாழ்க தமிழ்க்கலைகள்.

ஆடல் அரசி
**ஸ்ரீமதி மதிவதனி சுதாகரன்**
நிறுவுனர் - திருக்கோணேஸ்வரர் நடனாலயம்
இணையாளர்
வடஇலங்கை சங்கீத சபை- ஐரோப்பா

# சமூக சேவையாளரின் வாழ்த்துச் செய்தி



பரம் எமது பாரம்பரியத்துடன் தொடர்புடையது. நடனம் என்பது இறைவனின் உருவினை மனதில் நிறுத்தி வெவ்வேறு அசைவுகளினால் அவரது கருணையை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. அந்த வகையில் நல்லைக்கலாமந்திர் நடனாலய மாணவர்கள் வழங்கும் சதங்கைநாதம் நடனஆற்றுகைக்கு வாழ்த்து தெரிவிப்பதில் பெருமையடைகின்றேன்.

இவ்வகையான கலை விழாக்களினால் எமது மண்ணின் பெருமைகள் பறைசாற்றப் படுகின்றன. காலத்தால் அழியாத நடனக் கலையான தெய்வீகக் கலையினை நடனமாடும் மாணவர்கள் எல்லோரும் இறையருள் பெற்றவர்கள். இவ் ஆற்றுகையினை தயாரித்து வழங்கும் திருமதி அனுஷாந்தி சுகிர்தராஜ் அவர்களை மனதார வாழ்த்தி இவர்களின் நிகழ்வு இனிதாய் அமைய வாழ்த்துகிறேன்.

**"கலையினைப் போற்றி பாதுகாப்போம்"**



"கலைமாடக்கோன்" " அறக்கொடைச் செம்மல்"
**திரு.சண்முகம் சிவஞானம்**
(உரிமையாளர் SS ஞானம் அன் கம்பனி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய நாட்டிய கலைஞர்

## பத்மஸ்ரீ அடையாறு K. லக்ஷ்மணன் அவர்களின் பதிவுகள்



பத்மஸ்ரீ அடையாறு K.லக்ஷ்மன் அவர்கள் 1933ம் ஆண்டு மார்கழி மாதம் 16ம் திகதி இந்தியாவில் குப்பம் எனும் ஊரில் பிறந்தார்.

அவரின் தந்தை கிருஷ்ணராஜ நாயா ஓந் ஆசிரியர் இவருக்கு ஸ்ரீ ராம நாயா எனும் சகோதரர் உள்ளார். சிறு வயிதிலிருந்து கலையின் மீது ஆர்வம் கொண்டவராக இருந்த இவர் தனது 11வது வயதில் 1944ஆம் ஆண்டு வாய்ப்பாட்டு, பரதநாட்டியம், மிருதங்கம், நட்டுவாங்கம் என்பவற்றில் பயிற்சி பெற்றார். இவருடைய ஆரம்ப கால பயிற்சியானது ஸ்ரீமதி றுக்மணிதேவி அருண்டேலிடம் கிடைக்கப் பெற்றது. அத்துடன் மயிலாப்பூர் கௌரி அம்மா, மு.தண்டாயுதபாணிப்பிள்ளை, S.சாரதா, T.K.ராமசாமி ஐயர், மைசூர் வாசுதேவாசாரியார், தஞ்சாவூர் ராகோபால ஐயர், ஞ.விட்டல், கமலராணி, காரைக்குடி முத்து ஐயர் போன்ற பிரபலங்களும் இவரின் ஆசான்களாக இருந்துள்ளனர்.

தனது கல்வியை கலாஷேத்திராவில் பயின்ற இவர் 1954ம் ஆண்டு பரதம், கர்நாடக சங்கீதம், நட்டுவாங்கம் என்பவற்றில் பட்டம் பெற்றார். தொடர்ந்து அங்கிருந்தவாறே இந்திய அரசாங்கத்தின் புலமைப்பரிசிலைப் பெற்று பட்டப்பின் படிப்பிற்கான டிப்ளோமாவை 1956ம் ஆண்டு பெற்றுக் கொண்டார்.

இவரின் ஆசிரியர் பணி கலாஷேத்திராவில் மட்டுமல்லாது ஸ்ரீமதி வை.ஜெயந்திமாலா பாலிதின் நாட்டியாலயத்திலும் தொடர்ந்து, இங்கு 10 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய இவர் 10ற்கும் மேற்பட்ட அரங்கேற்றங்களுடன் திருப்பாவை, அழகர் குறவஞ்சி, சந்திரலேகா, சங்கத் தமிழ் மாலை போன்றவற்றைத் தயாரித்து வழங்கவும் உறுதுணையாக இருந்தார்.

இவர் 1969ம் ஆண்டு ஆவணி மாதம் 22ம் திகதி பரத சூடாமணி எனும் நுண்கலைக் கல்லூரியை ஸ்தாபித்து பரந்த அளவிலான நாட்டிய மேதைகளை உருவாக்கியதுடன் வருணபுரி, குறவஞ்சி, ஆச்சியார் குரவை போன்ற நாட்டிய நாடகங்களையும் தயாரித்து வழங்கினார்.

இவரின் படைப்புக்ளில் அலாரிப்பு, புஷ்பாஞ்சலி போன்றவை பெயர்போன உருப்படிகள் அத்துடன் ஹம்சகீதா, சுபசாஸ்திரி, ஆனந்த தாண்டவம் போன்ற படங்களிலும் சாஸ்திரிய நடனத்திற்கு நடன அமைப்புச் செய்துள்ளார். இவரின் திறமைக்கான கௌரவிப்பாக 1989ம் ஆண்டு பத்மஸ்ரீ விருதும், 1991ம் ஆண்டு சங்கீத நாட்டிய அக்கடமி விருதும் வழங்கப்பட்டது.

பரத நாட்டியத்திற்கும் கர்நாடக சங்கீதத்திற்கும் தன் வாழ்க்கையை அர்ப்பணித்த மகான் 2014ம் ஆண்டு ஆவணி மாதம் 19ம் திகதி சென்னை தமிழ்நாடு, இந்தியாவில் தனது 81வது வயதில் இறைவனடி சேர்ந்தார். இவர் தனது வாழ்க்கை காலத்தில் பல நாடுகளுக்கு கலைப்பயணம் மேற்கொண்டதோடு இலங்கையிலும் பல நிகழ்வுகளிலும் அரங்கேற்றங்களிலும் பிரதம விருந்தினராகவும் கலந்து சிறப்பித்துள்ளார்.

நம் நாட்டிலுள்ள பல நாட்டிய மேதைகள் பத்மஸ்ரீ அடையாறு K.லக்ஷ்மனின் மாணவிகளாக இருந்திருக்கின்றனர். திருமதி. சாந்தினி சிவனேசன், திருமதி.கிருஷாந்தி இரவீந்திரா, திருமதி.பத்மினி செல்வேந்திரகுமார், திருமதி.வாசுகி ஜெகதீஸ்வரன், திருமதி.வசந்தி குஞ்சிதபாதம், திருமதி.நந்தினி சிவராஜன் போன்றோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

கலாவித்தகர்
Dr (ஸ்ரீமதி) பிறேமிலா கேதாரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து நாட்டியக் கலைஞர் ய.தொம்மைக்குட்டி ஆசிரியர் அவர்களின் பதிவுகள்

மானிப்பாயில் திகதி 1927இல் சித்திரை மாதம் 24ம் திகதி அவதரித்தவர் தான் திரு.ய.தொம்மைக்குட்டி அவர்கள் இவர் சிறு வயது முதலே கலையார்வம் மிக்கவராகத் திகழ்ந்தார். சிறுவயதில் சங்கீதக் கலையிலேயே ஈடுபாடு அதிகம் உள்ளவராக விளங்கிய இவர் தனது இளமைப்பருவத்தில் பல்வேறு தொழில்களையும் செய்து வந்தார்.

பல்வேறு தொழில்களை தனது குடும்பச் சூழலினால் செய்து வந்த போதும் பல்வேறு கலைகளைக் கற்க வேண்டும் என்ற ஆர்வமும் இவரிடம் காணப்பட்டது. இதனால் இவர் தனது இளமைக் காலத்தில் தனது 20வது அகவையின் பின் பரதநாட்டியம், கதகளி, வயலின், வீணை, மோர்சிங் என பல கலைகளையும் கற்றுத் தேர்ந்தார்.

இந்தியா சென்று சென்னை ஜெயராமிடம் பரதநாட்டியத்தையும், கேரளாவில் குருகோபிநாத்திடம் முறைப்படி கதகளியையும் கற்றுத் தேர்ந்தார். இந்தியாவில் பல கலை நிகழ்வுகளையும் செய்து புகழ் பெற்றதுடன், ஈழத்திலும் பல கலை நிகழ்வுகளில் பங்குபற்றிப் பெயர் பெற்றர். வயாவிளான் மத்திய கல்லூரியில் சங்கீத ஆசிரியராக கடமையாற்றி வந்த இவர் சங்கீதம் சம்பந்தமான பாடசாலை பாடத்திட்டத்திற்கு அமைவான நூல்களையும் வெளியிட்டு வந்தார்.

மேலும் யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களிலும் நடன வகுப்புக்களையும், சங்கீதம், வீணை வகுப்புக்களையும் நடாத்தி வந்தார். இவர் ஒரு பல்துறைக் கலைஞராக விளங்கி மாணவர்களின் நன் மதிப்பைப் பெற்றவர்.

இவர் தனது மாணவர்கள் பலரை அரங்கேற்றம் காண வைத்தவர். குறிப்பாக அளவெட்டி கும்பளாவளையைச்சேர்ந்த Ms.S.வாசுகி, குரும்பசிட்டி Ms.வாணி கந்தவனம், தெல்லிப்பளையைச்சேர்ந்த சகுந்தலாதேவி, போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். மேலும் Ms.சாந்தாபொன்னுத்துரை இவரிடம் பயிற்சி பெற்ற மாணவராவார். இவரால் வாய்ப்பாட்டு அரங்கேற்றம் பெற்ற மாணாக்கரும் உள்ளனர். குறிப்பாக பாரதா, சாரதா சகோதரிகள் என்போரை குறிப்பிடலாம். Ms.அஞ்சலா பிராபகரன் அவர்கள் இவரிடம் நடனம், பாட்டு, வயலின் போன்ற கலைகளைப்பயின்று பிரகாசித்தவர் ஆவார். குரும்பசிட்டி நுண்கலைமன்ற வருடாந்த கலைநிகழ்வுகளில் பல கலை அரங்கேற்றங்களை செய்து வந்தார்.

முக்கியமாக குரும்பசிட்டிக் கிராமத்தில் தனது வாழ்வின் அரைப்பகுதியை செலவு செய்தவர் என்றே கூறலாம். குரும்பசிட்டி மாணவர்களிடம் அதிக ஈடுபாட்டுடன் கலைகளைக் போதித்த இவர் ஊதியம் பெற்று கலைகளைக் போதித்து வந்தார். குரும்சிட்டி நுண்கலை மன்றத்தினால் நடாத்தப்படும் கலைவிழாக்களிற்கு மாணவர்களை தயார்ப்படுத்தி நிகழ்ச்சிகளை வழங்கி அங்கு தனது கலைப்பணியைத் திறம்பட செய்து வந்தார்.

இவர் கலைச் செல்வன் கொக்குவில் திரு.ஏரம்பு சுப்பையா அவர்களது சமகாலத்தில் வாழ்ந்து அவருடன் நெருங்கிய தொடர்பு உள்ளவராக விளங்கியவர். ய.தொம்மைக்குட்டி அவர்களால் தன்னலம் பாராது கலைப்பணி செய்த ஒருவர். இதனால் தனிநாயகம் அடிகளால் இவர் கௌரவிக்கப்பட்டவர்.

தனது பிற்காலத்தில் சுவிற்சலாந்து தேசத்தில் வாழ்ந்தவர். அங்கு தனது மாணவி திருமதி.அஞ்சலா பிரபாகரனுடன் சேர்ந்து பல மாணவர்களுக்கு வீணை இசையினை பயிற்றுவித்து வந்ததோடு பல வீணைக்கலைச் சேவைகளையும் செய்து வந்தவர். இவர் அமரத்துவம் அடைந்து தமிழ்க் கலையுலகிற்கும், புலம்பெயர் தமிழ் உறவுகளிற்கும் பெரும் இழப்பாக இருந்துவருகின்றது. இவரது தன்னலம் பாராத சேவையினால் இவர் தனக்கு என்று ஒரு முத்திரையை பதித்துச் சென்றுள்ளார். இவர் 2012ம் ஆண்டு ஐப்பசி மாதம் இவ்வுலகை நீத்தார்.



**திருமதி.வலன்ரீனா இளங்கோவன்**
**ஆசிரியர்**
குரும்பசிட்டி பொன்.பரமானந்த வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதங்கை நாதத்தின் அணிசெய் கலைஞர்கள்

## நட்டுவாங்கம் : திருமதி அனுஷாந்தி சுகிர்தராஜ்



ஈழத்தின் முன்னணி ஒப்பற்ற மரபுவழி ஓவியராக விளங்கிய மறைந்த கலாபூஷணம் பெரியதம்பி சுப்பிரமணியம் (ஆர்ட்டிஸ்ற் மணியம்) அவர்களின் கலைப் பாரம்பரியத்தைக் கொண்ட குடும்பத்தில் பிறந்த ஸ்ரீமதி அனுஷாந்தி சுகிர்தராஜ் அவர்கள் யாழ் பல்கலைக் கழகத்தில் நாட்டியக்கலைமணி, நுண்கலைமாணி மற்றும் இந்தியா திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் முதுநுண்கலைமாணி பட்டத்தில் முதல் வகுப்பிலும் சித்தியடைந்தவர் என்பதுடன், வட இலங்கை சங்கீதசபையின் "கலாவித்தகர்" பட்டத்தினையும் பெற்றுக் கொண்டவர். மேலும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தினையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



## பாட்டு : திரு.தவமைந்தன் தவநாதன் றொபேட்

ஈழத்தமிழின் செவ்வியல் நாட்டார் கலைகள் அனைத்திலும் ஆழக்கால் பதித்திருக்கும் ஆற்றுகையாளரான திரு.நவநாதன்றொபேட் அவர்கள், இசையமைப்பாளராக, பாடகராக, கருவியளாராக, எழுத்தாளாளராக,ஆய்வாளராகத் திகழ்ந்து வருகின்றார். யாழ் பல்கலைக்கழக இசைத்துறையின் முதுநிலை விரிவுரையாளராவார்.

## பாட்டு : திருமதி.சுகன்யா அரவிந்தன்



பாரம்பரியமான இசைக்குடும்பத்தின் வழிவந்த திருமதி சுகன்யா அரவிந்தன் அவர்கள் வாய்ப்பாட்டிலும், நாட்டியத்திலும், வாத்திய இசைக்கருவியிலும் ஆற்றுகை செய்யக் கூடிய திறமை வாய்ந்தவர். இவர் சமூகவியல், இசை என்கின்ற இரு துறைகளிலும் போதிய புலமை கொண்டவர்.வாய்ப்பாட்டு, வயலின், பரதநாட்டியம் என்னும் துறைகளில் கலாவித்தகர் பட்டத்தைப் பெற்றுள்ளார்.



## மிருதங்கம் : திரு.சின்னையா துரைராசா

மிருதங்கத்துறையில், 25வருடங்களாக வாசித்துக்கொண்டுள்ளமையுடன், இதுவரை 6மாணவர்களுக்கு, மிருதங்க அரங்கேற்றம் செய்துள்ளார். மேலும் 20பரத நாட்டிய அரங்கேற்றத்திற்கு வாசித்துள்ளார் என்பதுடன் இந்தியாவிலிருந்து வருகை தரும் பல்துறை சார்ந்த கலைஞர்களுக்கும், இலங்கையின் புகழ்பூத்த ஆலயங்கள் மீது பாடப்பட்ட பக்தி பாமாலைக்கும், மிருதங்கம் வாசித்துள்ளார். இசைக்கலைமணி, இசை மாணி, மிருதங்கஞானவாரி ஆகிய பட்டக்களைப் பெற்ற இவர் தற்போது யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியில் இசை ஆசிரியராக கடமையாற்றுகின்றார்.

## வயலின் : திரு.அம்பலவாணர் ஜெயராமன்



நாச்சிமார் கோவிலடி காலஞ்சென்ற மிருதங்க வித்துவான் திரு.வே அம்பலவாணர் அவர்களின் மகனாவார். சங்கீத அவைக்காற்றுகைகள், நடன அவைக்காற்றுகைகள், நடன அரங்கேற்றங்கள், தனி வயலின் கச்சேரி, நாடகங்கள், பல்லியம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு வயலின் வாசித்து வருகின்றார். ஈழத்தின் பிரசித்தி பெற்ற ஆலயங்களின் பக்தி பாடல் இறுவெட்டுக்களில் வயலினி சையைக் கொடுத்து வருகிறார். இசைஞான சுரபி, வயலின்திலகம், கலைஞான சுடர், ஸ்ருதி வேந்தன் போன்ற பட்டங்க ளைப் பெற்ற இவர்கலாகீர்த்தி பிரம்மஸ்ரீ எஸ்.சர்வேஸ்வரசர்மா அவர்களின் மாணவராவார்.



## தபேலா திரு.வெங்கடேஷ ஐயா ரட்ணபிரபாகர சர்மா

மிருதங்க துறையில் கலாவித்தகர் பட்டத்தினை பெற்ற இவர் திரு.எஸ்.வேல்மாறன் திரு.எம்.சிதம்பரநாதன் ஆகியோரின் மாணவராவார். இவர் மிருதங்கம், தபேலா, போன்ற இசைக்கருவிகளை இசைக்கவல்லவர். இவர் கொக்குவில் சோதிட பிரகாச அச்சகத்தில் பணி புரிகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றுகை வழங்கும் நல்லைக்கலாமந்திர் மாணவர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றுகை வழங்கும் நல்லைக்கலாமந்திர் மாணவர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றுகை வழங்கும் நல்லைக்கலாமந்திர் மாணவர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றுகை வழங்கும் நல்லைக்கலாமந்திர் மாணவர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதங்கைநாதம் 2013 ஆற்றுகைப்பதிவுகள் சில...



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சதங்கைநாதம் 2013 ஆற்றுகைப்பதிவுகள் சில...

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதங்கைநாதம் 2013 ஆற்றுகைப் பதிவுகள் சில...












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மன் ஹாட்வெயர் ரேடர்ஸ்

முல்லை வீதி,
தருமபுரம்.

**கட்டடப்பொருட்கள் மொத்தச்சில்லைற விற்பனையாளர்கள்**

---

# Tilko Jaffna City Hotels

Spacious Luxurious Rooms | Gymnasium and spa | Beauty salon
Conference rooms | Banqueting hall | Entertainments

TILKO



No: 70/6 K.K.S Road
Jaffna , Sri Lanka
Tel: 021 2225969
Fax: 021 2227291
www.cityhoteljaffna.com
info@cityhoteljaffna.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜேஸ்வரி
## புடவையகம்

புடவை உலகின்
சாம்ராஜ்யம்





மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



# பிரபா களஞ்சியம்

வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.












# VPN Building Material Suppliers & Contractors

காங்கேசன் துறை வீதி
சுன்னாகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரா நகைமாடம்

கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.







# கண்ணன் ஸ்ரோர்ஸ்

சந்தை சுற்று வட்ட வீதி,
வவுனியா.






# Sivaas Distributors


**Demak Motor bike Authorized Distributors**

Stanley Road,
Jaffna.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் குழந்தைகளின் எதிர்காலம் சிறக்க இன்றே AIA
இன் கல்வித்திட்டதுடன்இணையுங்கள்



தொடர்புகளுக்கு
AIA Insurance Lanka Plc
62/6, Stanly Road, Jaffna.
021 222 1215

Official Insurance Partner
aialife.com.lk

CEYLINCO VIP ON THE SPOT
Market Leader
New Age
Ceylinco VIP

பெரியதோ சிறியதோ
எதையுமே காப்பது செலிங்கோ VIP

CEYLINCO
VIP
ON THE SPOT

கிளைகள் : யாழ்ப்பாணம்
சுன்னாகம்
நெல்லியடி
சாவகச்சேரி
அச்சுவேலி
மானிப்பாய்
சங்கானை
பருத்தித்துறை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிருபா லேணர்ஸ்

தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

*Reg No.Ds/589, Kiruba Learers, Govt.Approved*
*A Grade Driving Training School*

**Call : 021 222 4353 / 021 492 3200**
**0777225292**

## அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள் நடைபெறும்.
- அரச, தனியார் ஊழியர்கள் சனி,ஞாயிறு உட்பட தாம் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சிகளை மேற்கொள்ள முடியும்.
- எமது கிளை நிறுவனங்களிலும் வாகனப்பயிற்சிகள் நடைபெறும்.
- மும் மொழிகளிலும் ஆண், பெண் இருபாலருக்கும் வாகனப்பயிற்சிகள் நடைபெறும்
- தவணை முறையில் கட்டணம் செலுத்த முடியும்
- வவுனியாவில் பெண்களுக்காக கார்ப்பயிற்சி பெண் ஆசிரியரால் வழங்கப்படுகிறது
- ஆண், பெண் இருபாலருக்கும் Autp Gear and Manual வாகனப் பயிற்சி நடைபெறும்
- வாய் மொழி மூலம் பரீட்சை பெறுவதற்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள் நடைபெறும்
- விசேட வீடியோ வகுப்புக்கள் நடைபெறும்
- இரவு நேர வாகனப்பயிற்சி வழங்கப்படும்
- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்

## யாழ்ப்பாணம்

| சுன்னாகம் | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை |
|---|---|---|---|
| 021 228 5505 | 021 227 0700 | 021 300 6550 | 021 492 3204 |
| 071 454 6955 | 021 492 3202 | 071 454 6956 | 071 454 6958 |
| **கிளிநொச்சி** | **விசுவமடு** | **பூநகரி** | **முழங்காவில்** |
| 021 228 5505 | 021 320 1515 | 021 320 1818 | 021 300 6544 |
| 071 454 6955 | 071 454 6955 | 071 4546 955 | 071 454 6955 |

**வவுனியா**
A9 வீதி, வவுனியா
(சாந்தி தியேட்டருக்கு முன்பாக)
024 222 7777, 0777100444

**மன்னார்**
இல.94 பிரதான வீதி, மன்னார்
071 988 7699, 0778472732


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# MERCANTILE SECURITY SERVICE
## மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை

(பிறைவேட் லிமிடெட்)

**No:651/12, Navalar Road,**
**Nallur, Jaffna.**

மேக்கன்ரைஸ் பாதுகாப்புச் சேவையானது 1972ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்யப்பட்டு ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியான (Staff Sergeant) திரு.கந்தையா.அம்பலவாணர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு இன்று இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சேவை வழங்கி வருகிறது.


இந் நிறுவனமானது அரச அரசசார்பற்ற நிறுவனங்கள், தனியார் வங்கிகள் போன்ற பல்வேறுபட்ட தொழில் நிறுவனங்களிற்கு சேவை வழங்கி வருகின்றது. துணை நிறுவனமான மேக்ஸ் கிளினிங் சேவை மேற்போன்ற இடங்களிற்கு சுத்திரிப்புச் சேவையையும் வழங்கிவருகின்றது.


**இல:651/12, நாவலர் வீதி**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்**

THIYAHIE CHARITABLE TRUST

நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


**விழா சிறப்புற வாழ்த்துக்கள்**

பிரபல
பொது உளச்சார்பு நுண்ணறிவு
ஆசிரியர்,
பொ.உமாசங்கர் M.Com
(மருதானை தொழிநுட்பக்கல்லூரி)

Best Wishes
S.S.Gnanam & Co.
Anuradapura.

**கண்ணன் ஸ்ரோர்ஸ்,** வவுனியா
உரிமையாளர்:திரு.கௌரீசன்

**YARLAKAM** யாழகம்
Dealers in Sport Goods
#.568,Hospital Road, Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரந்தாமன் பல்பொருள் வாணிபம்

கனகபுரம் வீதி,
கிளிநொச்சி



பலசரக்கு மொத்த சில்லறை
வியாபாரிகள்





## அபிராமி அரிசி ஆலை

6ம் ஒழுங்கை, வேப்பங்குளம்,
வவுனியா.




## சின்னக்கண்ணன் கட்டடப்பொருள் &
## சின்னக்கண்ணன் எலக்றோனிக்ஸ்

முல்லை வீதி,
விசுவமடு.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியூ அருள்மணி மல்ரி சொப்

A9 வீதி
கிளிநொச்சி



A9 Road,
Kilinochchi.






## நல்லூர்க்கந்தன் வாணியம்

பழைய வைத்தியசாலை முன்பாக
கிளிநொச்சி

பலசரக்கு மொத்த சில்லறை
வியாபாரிகள்


## பார்நிலா ரேடேர்ஸ்

கனகபுரம் வீதி,
கிளிநொச்சி




## அன்னலட்சுமி ரேடேர்ஸ் &
## அன்னலட்சுமி பதிப்பகம்

கனகபுரம் வீதி,
கிளிநொச்சி

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிவுடன் நன்றிகள்

**காலத்தினால் செய்த நன்றி – சிறிது**
**எனினும் ஞாலத்தில் மாணப் பெரிது**

இன்று எனது மன்றத்தினால் சிறப்பாக நடாத்தப்படுகின்ற சதங்கைநாதம் - 2016 என்ற தொனிப்பொருளினான நடன ஆற்றுகைக்கு தலைமைப் பொறுப்பினை ஏற்று திறம்பட நடாத்திய நிகழ்வின் தலைவர் செந்தமிழ் சொல்லருவி திரு.ச.லலீசன் (உப அதிபர், ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்.) அவர்களிற்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நிகழ்வினை ஆசியுரை வழங்கி ஆரம்பித்துவைத்த ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள், சின்மயா மிஷன் யாழ்ப்பாணம் அவர்கட்கும் அருட்தந்தை வண.பிதா, லியோ ஆம்ஸ்ரோங் அடிகளார், பங்குத்தந்தை யாழ். புனித அந்தோனியார் ஆலயம், யாழ்ப்பாணம் அவர்கட்கும் எனது அன்பார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய விழாவிற்கு வாழ்த்துரை வழங்கிய எமது மன்ற போஷகரும், தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவருமாகிய கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களுக்கும் எமது நன்றிகள். இன்றைய விழாவிற்கு நாம் அழைத்தபோது எமக்காக பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்த கௌரவ.சிவஞானம் சிறிதரன் (பாராளுமன்ற உறுப்பினர், யாழ்ப்பாணம்.) அவர்கட்கு எனது மனப்பூர்வ நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

இவ் விழாவிற்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பித்த எனது குருவான கலாபூஷணம் திருமதி.பத்மினி செல்வேந்திரகுமார் (ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்) அவர்களிற்கும் எனது நன்றிகளை தெரிவிக்கின்றேன். நாம் நிகழ்விற்கான சிறப்புவிருந்தினராக அழைத்தபோது பெருமிகழ்வுடன் விழாவை சிறப்பித்த கலாகீர்த்தி திருமதி.சாந்தினி சிவநேசன் அவர்களிற்கும் எனது நன்றியினைத் தெரிவிப்பதில் மனமகிழ்கின்றேன்.

இவ் நிகழ்வினை திறம்பட அரங்கேற்ற உதவிய அணி செய் கலைஞர்களிற்கு, ஒலி அமைப்பினை செய்த ஸப்தமி கலைக்கூடத்தினருக்கும், Vedio ஒளிப்பதிவினை மேற்கொண்ட புதுமைப்படைப்பகம் திரு.றமணன் அவர்களிற்கும், மின் ஒளி வழங்கிய மனோலைற், கோப்பாய் அவர்களிற்கும், மேடைக்கான பல் ஒளிவிதானிப்பு தொழில்நுட்பத்தை வழங்கிய திரு.T.தர்மலிங்கம் (தர்மா) அவர்களிற்கும், திருமதி.க.நவதர்சினி அவர்களிற்கும் மற்றும் புகைப்பட பதிவு செய்த றெக்ஸ் ஸ்ரூடியோ அவர்களிற்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நிகழ்விற்காய் "அம்மன் கீர்த்தனை" நாட்டிய அமைப்பினை அமைத்து தந்துவிய எனது ஆசான் கலாநிதி.திருமதி கிருஷாந்தி இரவீந்திரா அவர்கட்கும் எனது பணிவான நன்றிகள்.

இந்நிகழ்வினை அரங்கேற்ற நல்லூர் துர்க்காமணி மண்டபம், இதனை சலுகை அடிப்படையில் தந்துதவிய மண்டப நிர்வாகத்திற்கும் எனது நன்றிகளை தெரிவிக்கின்றேன். இவ்விழாவினையொட்டி சதங்கைநாதம் எனும் மலரினை வெளியிடுவதற்காக விளம்பர அனுசரணையை பெற்றுத்தந்த திரு.தேவசீலன் அவர்களுக்கும் அனுசரணை தந்த அனுசரணையாளர்களுக்கும் அழகிய முறையில் அச்சிட்டு வழங்கிய மாருதி பிறிண்டர்ஸ் அவர்களுக்கும் எனது நன்றிகளை கூறுகின்றேன்.

இவ்விழாவானது இவ்வளவு சிறப்புற நிகழ்வதற்கு அல்லும் பகலும் ஆக்கமும், ஊக்கமும் தந்ததோடு விழாவிற்கான அனைத்து செலவினங்களையும் பகிர்ந்து கொண்ட மாணவர்களின் பெற்றோர்கள் அனைவரிற்கும் சிற்றுண்டி வசதிகள் மற்றும் ஏனைய வகைகளில் உதவிய அனைத்து பெற்றோர்களிற்கும் எனது அன்பான பணிவுள்ள நன்றிகள்.

மேடையின் பின்புற காட்சியினை வடிவமைத்த ஓவிய ஆசிரியர் திரு.வோல்லீன் மற்றும் திரு.கஜன் அவர்கட்கும் எனது நன்றிகள் சதங்கைநாதம் - 2016 எனும் மலர் சிறப்புற கட்டுரைகள் வழங்கிய திருமதி.வலன்ரீனா ஆசிரியர் அவர்கட்கும், திருமதி.கே..பிரேமிளா கேதாரன் அவர்கட்கும் எனது அன்பு கனிந்த நன்றிகள். நடன ஆற்றுகை சிறப்பாக நடைபெற பேருதவி புரிந்த மதிப்பிற்குரிய திரு.எஸ்.ஞானேந்திரன் அவர்களுக்கும் எனது பணிவான நன்றிகளைத்தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய விழாவிற்கு எமது அழைப்பினை ஏற்று பெருமளவில் கலந்து கொண்ட பெற்றோர்கள், மாணவர்கள், பெரியவர்கள், கலைஞர்கள், கல்விமான்கள், நண்பர்கள், அனைவரிற்கும் எனது அன்பு கலந்த நன்றியினை மனமகிழ்ந்து தெரிவிக்கின்றேன். ஈற்றில் எல்லாம் வல்ல நடராஜப் பெருமானை வணங்கி எங்களுடைய சதங்கைநாதம் - 2016 நடன ஆற்றுகையினை அவர்தம் பாதங்களில் பணிவுடன் சமர்ப்பணம் செய்கின்றேன்.

நன்றி

**திருமதி. அனுஷாந்தி சுகீர்தராஜ்**
**இயக்குனர் – "நல்லைக் கலாமந்திர்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதங்கைநாதம் 2013 ஆற்றுகைப்பதிவுகள் சில










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











**The Divine art of Bhatatha Nattiya builds up both the body and the mind and is of much antiquity and of unbroken continuity. Through competent Dance teachers of the " Guru – Sheeshya " tradition the student community is guided by this Dance form to lead an optimum life style.**

**As Tamils may we indulge with interest and enthusiasm in such a noble art and Dance form namely Bhatatha Nattiya.**

**Let us realize and act that " the pleasure of aesthetics is the only permanent one "**

**Let us realize that this is an art embedded in Divine experience and make every effort to give a place to the sense of aesthetics and the practice of this art in each home and every family.**
**" Nallai Kalamanthir "**

*'Nalli Kala Manthir'*

55,Chethy Street, Nallur, Jaffna,
T.p: 021 222 8127 / Email: nallaikalamanthir@gmail.com

ஸ்ரீ மாருதி பிறிண்டேர்ஸ் 0777917680

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org